நகர் ஊரமைப்பு - சிவகங்கை மாவட்டம்

சிவகங்கை மாவட்டம், இளையான்குடி வட்டம், இளையான்குடி பேரூராட்சி,
சோதுகுடி கிராமம், நில அளவை எண்:374-ல் அமையும்
குடியிருப்பு மனைப்பிரிவு தொழில் நுட்ப ஒப்புதல் வரைபடம்.

இணையதள கோப்பு எண்:KN26784S/TCP/2025

அளவு திட்டம்: 1:400

வ

மனைப்பிரிவு இடத்தின் எல்லை	கோரப்பட்ட மனைகள் - 108
நிலையிலுள்ள சாலை	ஒதுக்கப்பட்ட மனைகள் - 108
மனைப்பிரிவு உத்தேச சாலை	கு.வ.பி மனைகள் - 26 (43-55,60-72)

பரப்பளவு விபரம்

மனைப்பிரிவின் மொத்தப்பரப்பளவு	= 18300.00சமீ (4.52ஏக்கர்)
மனைப்பிரிவு உத்தேச சாலையின் பரப்பளவு	= 5462.99ச.மீ
மனையிடங்களின் மொத்தப்பரப்பளவு	= 12837.01சமீ
கு.வ.பி மனையிடங்களின் மொத்தப்பரப்பளவு	= 1339.52 சமீ (10.43%)

பொது ஒதுக்கீடுகள்

உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

பூங்கா = 1289.76சமீ (10.05%)

உள்ளாட்சி உபயோக மனை - 64.38சமீ (0.502%)

மின்வாரிய உபயோக மனை - 65.63சமீ (0.51%)

(அரசாணை எண்:18, ந.நி.(ம)கு.வ(ந.ப.1)துறை நாள்:04.02.2019, விதி-47(6)-ன்படியும் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்:4367/2019-பிஏ2, நாள்:05.02.2020-ன்படி பூங்கா ஒதுக்கீடு பரப்பினை உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது)

உத்தேச சாலைகள்:

10.00மீ அகல சாலை
9.00மீ அகல சாலை
7.20மீ அகல சாலை

கட்டிட வரம்பு

சாலையின் அகலம் 12.00மீ வரை - 1.50மீ விடப்பட வேண்டும்

மூலை மடக்கு

சாலையின் அகலம் 12.00மீ வரை 1.50மீx1.50மீ விடப்பட வேண்டும்

நிபந்தனைகள்

1. அரசாணை எண். 71 ஊ.வ.(சி2) துறை நாள் 16.08.03-ன் படி சாலைகள் ஒதுக்கீட்டினை உள்ளாட்சிக்கு மனுதாரரால் தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது, மேலும் மேற்படி அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு நில உரிமைக்கு ஊராட்சியே பொறுப்பு என்பதுடன் ஊராட்சியினால் வழங்கப்பட்ட நில உரிமை சான்றின் அடிப்படையிலேயே இம்மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்படுகிறது.
2. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும்முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்க்கொள்ளப்படவில்லை என்றும் எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப்பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும் உள்ளாட்சி உறுதி செய்து கொள்ள வேண்டும்
3. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்விதமுன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் இரத்து செய்யப்படும்.
4. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்
5. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவுவாயிலில் 6' X 4' அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்
6. **The Tamilnadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department dated: 22.06.2017 have approved the Tamilnadu Real Estate (Regulation & Development) Act 2016. The promoter has to advertise, market book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Authority**
7. அரசாணை எண். 18 ந.நி(ம)கு.வ துறை நாள் 04.02.2019-ன் விதிகள் அனைத்தும் பொருந்தும்
8. வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள 1மீ அகலத்திற்கு கட்டிடம் கட்ட தடை செய்யப்பட்ட பகுதி அதன்படியே நிலையிலும் நிலைநிறுத்தப்படவேண்டும்.
9. மனையிடத்தின் ஊடே செல்லும் உயர் மின்னழுத்த மின்கம்பிப் பாதையினை மனுதாரர் தனது சொந்த செலவில் சாலையின் போக்கில் மாற்றியமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.
10. நிலையிலுள்ள சாலையின் குறுக்கே செல்லும் நிலவியல் வாய்க்காலின் மீது அதன் போக்கிற்கு தடையேதும் இல்லாமல் உரிய துறையின் அனுமதி பெற்று உத்தேச பாலம் அமைக்கப்படவேண்டும்.

L.P(SWP)/DTCP/SIVAGANGAI NO:49/2025

உதவி இயக்குநர்
சிவகங்கை மாவட்டம் - சிவகங்கை.

Signature valid Signature valid